**வெஸ்ற் கோஸ்ற் பவர் (பிறைவேட்) லிமிட்டட் - 2022/2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

வெஸ்ற் கோஸ்ற் பவர் (பிறைவேட்) லிமிட்டட்டின் ("கம்பனி") 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன

### 1.3 விடயப்பொருளின் வலியுறுத்தல

எனது அபிப்பிராயத்திற்கு முனைப்பழிவு இல்லாமல், நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதில் உள்ள தொடர்ந்து இயங்குதல் எடுகோள்கள் குறித்த நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 15.9 க்கு நான் கவனத்தை ஈர்க்கின்றேன்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மின் உற்பத்தி தொடர்பான மின்சார கொள்வனவு உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியால் வழங்கப்பட்ட மாதாந்த விலைப்பட்டியல்கள் இலங்கை மின்சார சபையால் (சீஈபீ) மதிப்பாய்வு செய்யப்பட்டன, மேலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சீஈபீ ஏற்றுக்கொண்ட தொகை விலைப்பட்டியல் தொகையை விட குறைவாக இருந்தது. வேறுபாட்டிற்கு தாக்கமளித்த காரணங்களை வழங்காமல், இணங்கப்பட்ட தொகையை சீஈபீ உறுதிப்படுத்தியிருந்தது. 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு சீஈபீயிடமிருந்து ெறவேண்டிய மீதி ரூபா 110,194 மில்லியனாகவிருந்தது. எனினும், சீஈபீயிடமிருந்தான மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் உரிய செலுத்த வேண்டிய மீதி ரூபா 79,382 மில்லியனாகவிருந்தது. மேலும், மேற்கூறப்பட்ட பெறவேண்டிய மீதிக்கான காலக்கழிவாக ரூபா 12,160 இனை ஏறடபாடாக மேற்கொண்டிருந்தது. | டபிள்யூசீபீஎல் க்கு சொல்லப்பட்ட தொகையின் அறவீட்டினை நிரூபிப்பதற்கான அனைத்து சட்ட மற்றும் நிதிச் சான்றுகளை நாங்கள் வைத்துள்ளோம். டபிள்யூசீபீஎல் மற்றும் சீஈபீக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட மின்வலு கொள்வனவு உடன்படிக்கையில் (பீபீஏ) உரிமையாக்கப்பட்ட சட்டத்துவத்தை முக்கியமாக வைத்துள்ளோம். பீபீஏ இல் குறிப்பிடப்பட்ட அளவீடுகளிற்குரிய நிச்சயமான ஏற்றுக்கொள்ளல்களிற்குப் பதிலாக முரண்பாடொன்றை சுட்டிக்காட்டுவதை நாங்கள் விரும்புவதுடன் சீஈபீயானது உடன்படிக்கையில் முறையான சீராக்கங்கள் இல்லாமல் வேறுபட்ட அளவீடுகளின் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தது. | சீஈபீயுடனான பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| செலோன் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் கைச்சாத்திடப்பட்ட மின்சார கொள்வனவு உடன்படிக்கையின் 5.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் அத்தகைய விலைப்பட்டியல் கிடைத்து ஏழு நாட்களுக்குள் அந்த விலைப்பட்டியலில் உள்ள ஏதேனும் தொகையை செலுத்தப்பட வேண்டும்". எனினும், 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு சீபீசீக்கு செலுத்த டேிவண்டிய மீதி ரூபா 39,794 மில்லியன் தொகையானதுடன் | மீளாய்வாண்டின் போது சீஈபீக்கொடுப்பனவுகளின் பெறுகைகள் பற்றுச்சீட்டிடப்பட்ட தொகையிலும் பார்க்க மிகக்குறைவாகவிருந்தது. அதன் விளைவாக, கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருளிற்காக செலுத்தவேண்டியவைகளை தீர்ப்பனவு செய்யமுடியாதிருந்தது. நாங்கள் இந்த விடயத்தினை சீஈபீயுடன் பல தடவைகள் கலந்துரையாடியதுடன் இதுவரை எந்தவித முன்னேற்றங்களுமிருக்கவில்லை. சீபீசீக்குச் செலுத்தவேண்டியவ வட்டித் தொகையினை சீஈபீயிடமிருந்து பெறவேண்டிய மீதியிலிருந்து அறவிட்டிருந்ததுடன் டபிள்யூசீபீஎல்க்கு எந்தவித நட்டமுமிருக்கவில்லை. | உரிய தரப்பினர்களுடன் ஒருங்கிணைந்து பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அதில் ரூபா 19,317 மில்லியன் செலுத்தவேண்டிய மீதி 5 மாதங்களிற்கு மேலாக செலுத்தப்படாதிருந்தது. அதன் விளைவால், சீபீசீ மீளாய்வாண்டிற்காக கம்பனியிடமிருந்து ரூபா 727 மில்லியன் தொகையான வட்டியினை அறவிட்டிருந்தது.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 17 ஆம் திகதிய அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களிற்கான செயற்பாட்டு கையேடு. | | | |
| | (i) 3.1 ஆம் பிரிவு | அனைத்து அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களும் தங்கள் பதவியணியினர் மற்றும் சம்பளத்திற்காக பொது திறைசேரியின் அங்கீகாரத்தை பெற வேண்டும். கம்பனி இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | இந்த கம்பனி யுகதாவனவி 300 எம்பீ இணைக்கப்பட்ட சுழற்சி மின் உற்பத்தி நிலையத்தின் சொந்தமாக்குவதற்காக அமைக்கப்பட்ட ஒரு ஒற்றை நோக்க கம்பனியாகும். மின் உற்பத்தி நிலையத்தின் முழுச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு ஒரு ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்படுகிறது. அதற்கிணங்க டபிள்யூசீபீஎல் அனைத்துச் செயற்பாடுகளையும் சுமூகமாக மேற்கொள்வதற்கு மூன்று உத்தியோகத்தர்களை மாத்திரம் வேலைக்கமர்த்தியிருந்தது. அவர்களின் சம்பளம் பிரகாரம் சபையால் வருடாந்தம் அங்கீகரிக்கப்படுவதுடன் இவ் ஆட்சேர்ப்புக்கள் தகைமைகள் மற்றும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இந்த வருடத்தின் போது எந்தவித ஆட்சேர்ப்புக்களோ அல்லது ஓய்வூதியங்களோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறப்பட்ட கையேடுகளின் ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) 3.2 (vi) ஆம் பிரிவு | பொது திறைசேரியால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை வழிகாட்டல்களுக்கு இணங்க மிகையூதியக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கிணங்க, கம்பனி 2022 திசெம்பர் 21 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மிகையூதியத்தை செலுத்த வேண்டும். எனினும், மேற் கூறப்பட்ட சுற்றறிக்கையுடன் இணங்காமல் கம்பனியானது மிகையூதியமாக ரூபா 1.85 மில்லியனை கம்பனியின் அனைத்து மூன்று உத்தியோகத்தர்களுக்கும் செலுத்தியிருந்தது. மேலும், மேற்கூறப்பட்ட கொடுப்பனவு தொடர்பான சபை அங்கீகாரம் மற்றும் ஏனைய ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய கொரோனா பரவல் மற்றும் தீவீர நெருப்படியின் போது நிறைவேற்று உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட 24 மணித்தியால தொழிற்பாட்டிற்கான முக்கிய பங்கிற்காக அவர்களிற்கு ரூபா 1,850,000 செலுத்தப்பட்டது. | - மேற்படி - |
| (iii) 6.6 ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவடைந்து (5) மாதங்களிற்குள் வருடாந்த அறிக்கை அறிக்கையிடப்பட வேண்டும். எனினும், கம்பனி அதன் தொடக்கத்திலிருந்து ஆண்டறிக்கையை சமர்ப்பித்திருக்கவில்லை. | டபிள்யூசீபீஎல் இன் செயற்பாடுகளின் தரப்பட்ட மிக முக்கிய தன்மையின் பிரகாரம் கம்பனியானது சொல்லப்பட்ட செய்றபாட்டு கையேட்டிலிருந்தான விதிவிலக்கிற்காக பீஈடிக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்பதுடன் தற்போதைய பெறுகை கையேட்டினை பின்பற்றுவதற்கு வேண்டப்பட்டது. | - மேற்படி -- |
| (iv) 7.5 ஆம் பிரிவு | அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்கள் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளை வரிசை அமைச்சு மற்றும் பொதுதிறைசேரிக்கு தேவையான வடிவங்களில் அனுப்புதல் வேண்டும். கம்பனி இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | டபிள்யூசீபீஎல் இன் செயற்பாடுகளின் தரப்பட்ட மிக முக்கிய தன்மையின் பிரகாரம் கம்பனியானது சொல்லப்பட்ட செய்றபாட்டு கையேட்டிலிருந்தான விதிவிலக்கிற்காக பீஈடிக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்பதுடன் தற்போதைய பெறுகை கையேட்டினை பின்பற்றுவதற்கு வேண்டப்பட்டது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 2021 நவம்பர் 17 ஆம் திகதிய அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல்கள் | | | |
| (i) 2.3 ஆம் பிரிவு | இறுதி செய்யப்பட்ட மூலோபாயத் திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்துடன் தொடர்புடைய வரிசை அமைச்சின் செயலாளர் ஊடாக பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அல்லது தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி மேற்படி தேவைப்பாடுகளுடன் இணங்கத் தவறியிருந்தது | இந்தக் கம்பனியானது தேசிய சாலைக்கு மின்சாரத்ததை வழங்குவதற்காக அதனுடைய பங்குதாரர்களுக்கு இலாபத்தை தோற்றிவிப்பதந்காக உருவாக்கப்பட்ட கம்பனியாகும். இந்த இலக்கானது கடந்த 13 வருடங்களிற்காக அடையப்பட்டது. ஆகையால், ஏற்கனவே இணங்கப்பட்ட ஒப்பந்த கடப்பாடுகளுக்கு தந்திரோபாயத்திட்டத்தினை தயாரிப்பது தேவையற்றதொன்றாகும். | - மேற்படி - |
| (ii) 4.4 ஆம் பிரிவு | அனைத்து அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களும் கணக்காய்வுக் குழு மூலம் சபைக்கு மாத்திரமே அறிக்கை அளிக்கும் உள்ளக கணக்காய்வாளொருவரை கொண்டிருக்க வேண்டும். கம்பனி மேற்படி தேவைப்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை. | நியதிச்சட்ட கணக்காய்வு இந்த நடைமுறைகள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களுக்கு இணங்குவதற்கான கணக்காய்வை உள்ளடக்குகிறது. கம்பனியின் முழு பதவியணியினரும் 3 நபர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் சீபீசீ, கெமிக்கல்ஸ் ஆகியவற்றிலிருந்து எரிபொருளை மொத்தமாக கொள்வனவு செய்வதற்கும், வருடாந்த நியதிச்சட்ட கொடுப்பனவுகளுக்கும் மாத்திரமே கம்பனி பொறுப்பாகும். | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 19,437 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 18,811 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 626 மில்லியன் தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மின்உற்பத்தி வருமானம் அதிகரித்தமை இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

## 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

அ. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான வருமானம் 126 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதே சமயம், விற்பனைக் கிரயம் 153 சதவீதத்தால் அதிகரித்தடைந்துள்ளது.

ஆ. கம்பனியின் நிதி வருமானம் 18 சதவீதத்தாலும், கம்பனியின் நிதிக் கிரயம் 651 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளன.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கம்பனியின் மொத்த இலாப விகிதம் 43 சதவீதத்திலிருந்து 36 சதவீதம் வரை குறைவடைந்துள்ளதுடன் தேறிய இலாப விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 50 சதவீதத்திலிருந்து 23 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உரிமை மீதான திரும்பல் விகிதம் 23 சதவீதத்தில் இருந்து 21 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடைமுறை விகிதம் 2.9 சதவீதத்தில் இருந்து 1.8 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது.